முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 9/2019

இன்று 2025 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 06 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பத்மநாபன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சுப்பிரமணியம் | கிராமம் | : 15 வேலம்பாளையம் |
| வயது | : 69 | தாலூக்கா | : |
| நாள் | : 06-02-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) தாவா என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எங்களுக்கு பாத்தியப்பட்ட பூமியிலுள்ள பாதையில் உரிமை கோரி வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள். கடந்த 1958ம் வருடத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தாத்தா தம்பணக் கவுண்டர் தாவாச் சொத்துக்களை கிரயம் பெற்றிருக்கிறார் என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ.1 ஆவணத்தின் பக்கம் 2ல் தடமானது மாமூல் தடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் தம்பணக் கவுண்டர் வகையறாவிற்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்ட தடம் என்று குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். தாவாச் சொத்தானது மெயின்ரோட்டில் இருந்து 2 வது பூமியாக உள்ளது என்றால் சரிதான்.

3) தாவாச் சொத்தின் வடக்கு பக்கத்தில் கிழமேல் தடம் அமைந்துள்ளது என்றால் சரிதான். கிழமேல் தடத்திற்கு வடக்கு புறம் க.ச.எண்.453, 254 பூமிகள் இருக்கிறது என்றால் சரிதான். க.ச.எண்.453, 254 பூமிகளின் உரிமையாளர்களை இவ்வழக்கில்

கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். தம்பணக் கவுண்டர் கிரயம் வாங்குவதற்கு முன்பு, சொத்துக்கள் அனைத்தும் விவசாய நிலமாக இருந்தது என்றால் சரிதான்.

4) தம்பணக் கவுண்டர் கிரயம் வாங்குவதற்கு முன்பு, தாவாச் சொத்தும் இதர சொத்துக்களும் பிரதிவாதியின் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். கிழமேல் தடம் கிழக்கில் என்னுடைய சித்தப்பா டி.வெங்கடாசலம் பூமி வரை செல்கிறது. க.ச.எண்.453 ல் ஒரு கிணறு உள்ளது என்றால் சரிதான். க.ச.எண்.453 ல் உள்ள கிணற்றில் அனைவருக்கும் பாகம் உள்ளது என்றால் க.ச.எண்.453 ல் கிழபுற பகுதியிலுள்ள இரண்டு பாகஸ்தர்களுக்கு மட்டும் பாத்தியப்பட்டதாகும்.

5) கருப்ப கவுண்டரின் வாரிசுகள் அவர்களுக்குள் பாகப்பிரிவினை செய்து கொண்ட விவரம் எனக்கு தெரியும். பத்திரத்தை படித்துப் பார்த்து தெரிந்து கொண்டேன். கடந்த 23.06.1926 ம் தேதியில் பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது. பாகப்பிரிவினை பத்திரத்தில் மேற்சொன்ன கிணறானது பாகஸ்தர்களுடன் சேர்ந்து பொதுவாக அனுபவித்துக் கொள்ளவேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6) மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் இந்த இரண்டு காலைகளின் வடபுறத்து வேலியில் 4 முழ அகலத்தில் கிழமேலாக க.ச.எண்.453, 254 காலைக்கு நடக்க தடம் விடப்பட்டு இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிணற்றிற்கு செல்ல மேற்சொன்ன தடம் தான் பொது தடம் என்றால் இல்லை. கிணற்றிற்கு செல்ல மேற்சொன்ன தடம் தான் பொது தடம் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யான சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் கடந்த 23.06.1926 ம் தேதியிட்ட பாகபிரிவினை பத்திரம் என்றால் சரிதான். கடந்த 23.06.1926 ம் தேதியிட்ட பாகபிரிவினை பத்திரத்தின் பதிவு சான்று கணினி நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) வா.சா.ஆ.11 ஆவணத்தில் க.ச.எண். 253, 254, 453, 454 ஆகியவை வண்டித்தடமாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்குரையை திருத்த மனு தாக்கல் செய்து, அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். முதல் விசாரணையின் 5 மற்றும் 6 பாராக்களில் சொல்லப்பட்ட சங்கதிகள் எதுவும் வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

8) க.ச.எண்.453 காலையிலுள்ள கிணற்றின் மின் இணைப்பு பழனிக் கவுண்டர் பெயரில் இருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பழனிக் கவுண்டர் பிரதிவாதியின் தாத்தா என்றால் சரிதான். கடந்த 1949ம் வருடம் குழந்தை கவுண்டர் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்திலும் தாவா தடம் பொது தடம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் இரண்டு தடங்கள் காட்டப்பட்டுள்ளது.

(கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க சாட்சியின் தொடர் குறுக்கு விசாரணைக்காக தாவா ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

PRAVEEN KUMAR T

Digitally signed by PRAVEEN KUMAR T
Date: 2025.02.06 17:27:42 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.